உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# சோதனை



Compiled by
P. Isaac Chandran

அவர் என்னைச் சோதித்தபின் பொன்னாக விளங்குவேன்.
யோபு 23:10

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.
யாக்கோபு 1:12

அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.
1 பேதுரு 1:7

அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப்பண்ணி, வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்களைப் புடமிடுவேன்.

அவர்கள் என் நாமத்தைத் தொழுதுகொள்வார்கள். நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன். இது என் ஜனமென்று நான் சொல்லுவேன். கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள்.
சகரியா 13:9

என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது,

உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.

நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.
யாக்கோபு 1:2,3,4

வெள்ளியைக் குகையும், பொன்னைப் புடமும் சோதிக்கும்: இருதயங்களைச் சோதிக்கிறவரோ கர்த்தர்.
நீதிமொழிகள் 17:3

உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து,

உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக.
உபாகமம் 8:2

மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்
எபிரேயர் 11:17

தேவனே, எங்களைச் சோதித்தீர், வெள்ளியைப் புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர்.
சங்கீதம் 66:10

நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து, இராக்காலத்தில் அதை விசாரித்து, என்னைப் புடமிட்டுப்பார்த்தும் ஒன்றும் காணாதிருக்கிறீர், என் வாய் மீறாதபடிக்குத் தீர்மானம்பண்ணினேன்.
சங்கீதம் 17:3

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல்,

சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.
1 கொரிந்தியர் 10:13

கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார், துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது.
சங்கீதம் 11:5

மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள். உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், தேவன் எழுந்தருளினார் என்றான்.
யாத்திராகமம் 20:20

ஆம்! கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார், உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வோம்

**********************